**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.98/2020**

**PW4**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுகந்தா |
| **Husband's Name** | : | லட்சுமணன் |
| **Village** | : | கோணலூர் |
| **Taluk/District** | : | கீழ்பென்னாத்தூர் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.02.2026.
A1 ,2 and 8 present. A3 to 7 ,9 to 11 absent. Petition U/s. 317 filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோணலூரில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளான அர்விந்த், சுமதி, பெருமாள் ஆகியோரை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத மற்ற 8 நபர்களையும் எனக்கு தெரியும். எங்கள் ஊரில் சுடுகாடு பிரச்சனை ஆஜர் எதிரி வகையறாவுக்கும் எங்களுக்கும் இடையே இருந்தது. சுடுகாடு செல்வதற்காக நேராக பாதை இல்லாததால் சுற்றி செல்லவேண்டியதாக இருந்தது. அதனால் ஊரில் எந்த இறப்பு நேரிட்டாலும் எங்கள் பட்டா நிலத்தின் வழியாக சுடுகாட்டிற்கு பிணங்களை எடுத்து சென்றதால் எங்களுக்கும் ஊர்க்காரர்களுக்கும் இடையே பிரச்சனை இருந்துகொண்டே இருந்தது. அதனால் என் மாமியார் கண்ணம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி எங்கள் நிலத்தை பயன்படுத்தக்கூடாது என்று தடை உத்தரவு பெற்றார். அதனால் எங்கள் குடும்பத்தை ஊரைவிட்டு அப்புறப்படுத்திவிட்டார்கள். அதே நிலையில்தான் 4 வருடமாக வாழ்ந்து வருகிறோம். கடந்த 04.12.2015 அன்று மாலை 4.00 மணியளவில் அந்த சமயத்தில் ஊர்தலைவராக இருந்த எதிரி சுமதி ,பெருமாள், சீத்தாராமன் , பிரகாஷ், பாலு, அர்விந்த், ஆறுமுகம், சண்முகம், செல்வராஜ், ரமேஷ், கார்த்தி ஆகியோர் கத்தி

கடப்பாரையுடன் ஊரில் இருந்து எங்கள் வீட்டை நோக்கி வந்தார்கள். அவர்கள் எங்கள் பட்டா நிலத்திற்குள் நுழைந்து நாங்கள் 17 வருடங்களாக வளர்த்து வந்த 63 தேக்குமரங்களை அடியோடு வெட்டிவிட்டார்கள். அதன் மதிப்பு அப்போதே ரூ.35,00,000/- இருக்கும். அப்படியே எங்கள் வீட்டு பக்கமாக வந்து நாங்கள் புதிதாக கட்டியிருந்த 12 அடி உயரம் மற்றும் 60 அடி நீளம் கொண்ட சுவரை இடித்து விட்டார்கள். அப்போது வீட்டில் என் அக்கா மலர்கொடி, என் மகன் சிவா, என் மகள் தீபா, என் மகன் விஜய் ஆகியோர் அப்போது இருந்தோம். என் மகன் சிவா சென்று ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரி பெருமாள் " டேய் தெவிடியாபையா ஒழுங்கா ஊரை காலி பண்ணிகிட்டு ஊரைவிட்டு போயிடுங்க " என்று சொல்லி திட்டினார். மற்ற எதிரிகள் வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். " எங்கள் மேல் போட்ட கேசை வாபஸ் வாங்கிட்டு ஊரை விட்டு ஓடி போய்டுங்க இல்லனா பெட்ரோல் ஊத்தி கொன்னுடுவோம்" என்று கூட இருந்த சீத்தாராமன் மற்றும் பலர் சொன்னார்கள். " நீ எங்க போய் புகார் கொடுத்தாலும் எங்களை ஒரு மயிறும் புடுங்க முடியாது. ஏற்கனவே நாங்கள் RI மண்டைய உடைச்சவங்க " என்று மிரட்டினார்கள். எங்கள் வீட்டை சுற்றி வந்து இன்னும் இரண்டு நாளில் உங்க நிலத்தில் தார் ரோடு போடுவோம் என்று சொன்னாங்க. நாங்கள் பயந்துகொண்டு இருந்தோம்.

2. மறுநாள் 05.12.2015 அன்று இரவு 8.00 மணியளவில் என் மகன் சிவா வேட்டவலம் காவல் நிலையத்திற்கு சென்று ஒரு புகார் கொடுத்தார். மறுநாள் போலிசார் வந்து எங்களை விசாரித்தார்கள். நாங்கள் நடந்ததை சொன்னோம்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> – நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.